## சுருக்கம்

நில எடுப்பு – தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் வட்டம் மாதவன்குறிச்சி கிராமம் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தினரால் சிறியரக செயற்கைகோள் ஏவுதளம் அமைக்க நில எடுப்பு - அலகு-VIII, தொகுதி 2ல் நில எடுப்பு செய்யப்படவுள்ள கூடல் நகர் மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செய்வதற்காக மாற்று இடம் தேர்வு செய்தல் - திருச்செந்தூர் வட்டம், செட்டியாபத்து கிராம புல எண்.269/3ல் உள்ள மொத்த விஸ்தரணம் 4.02.00 ஹெக்டேரில் 2.42.92 ஹெக்டேர் நிலத்தினை நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், 2013 (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துவது – நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் (ஜிஜளம்) துறை

அரசாணை (நிலை) எண்.97

நாள் 19.4.2023
சோபகிருது வருடம், சித்திரை-6
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.175, தொழில் (ஜிஜளம்) துறை, நாள் 9.10.2019.
2. அரசாணை (நிலை) எண்.85, தொழில் (ஜிஜளம்) துறை, நாள் 12.4.2022.
3. மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி கடித எண்.நி.எ/அலகு-VIII/167/2020 நாள் 19.9.2022
4. நில நிர்வாக ஆணையர், சென்னை கடித எண்.எச்1/3221751/2022, நாள் 6.10.2022

-----

**ஆணை:**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்திலுள்ள மாதவன்குறிச்சி கிராமத்தில் அலகு-VIII, தொகுதி-2ல் உள்ள கூடல்நகர் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செய்வதற்காக திருச்செந்தூர் வட்டம், செட்டியாபத்து கிராம புல எண். 269/3-ல் 2.42.92 ஹெக்டேர் நிலத்தினை, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும்

ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், 2013 அல்லது தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலஎடுப்பு செய்யும் பொருட்டு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கீழ்கண்ட விபரங்களை தெரிவித்து அரசின் நிர்வாக அனுமதியினை பெற்று வழங்குமாறு நில நிர்வாக ஆணையரை கேட்டுக்கொண்டுள்ளார்.

i. தூத்துக்குடி மாவட்டத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சிறியரக செயற்கைகோள் ஏவுதளம் அமைக்கும் நோக்கில், திருச்செந்தூர் வட்டத்தில் மாதவன்குறிச்சி கிராமம் மற்றும் சாத்தான்குளம் வட்டத்தில் படுக்கப்பத்து மற்றும் பள்ளக்குறிச்சி ஆகிய கிராமங்களில் 904.24.65 ஹெக்டேர் பட்டா நிலங்கள் 2013-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் அவசரப்பிரிவு 40(1)ன்கீழ் நில எடுப்பு செய்யவும், 57.42.25 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்வதற்கும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

ii. மேற்படி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.இ2/27593/2018 நாள்: 03.12.2019-ன்படி நிர்வாக வசதிக்காக எட்டு அலகுகளாக பிரிக்கப்பட்டு, பின்னர் தனி மாவட்ட வருவாய் அலுவலர்(நிஎ) செயல்முறைகள் ஆணை எண். ந.க.நிஎ.1/1/2019, நாள்: 11.12.2019-ன்படி அலகு-VIIIல் 1 முதல் 12 தொகுதிகளாக (Block) பிரிக்கப்பட்டு, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் மாதவன்குறிச்சி கிராமத்தில் புல எண்.90/1 மற்றும் 331 புல எண்களில் மொத்தம் 101.76.97 ஹெக்டேர் புன்செய் நிலங்கள் கையகப்படுதும் பணிகள் நடைபெற்று வருகிறது.

iii. தற்போது அலகு-VIIIல் உள்ள 12 தொகுதிகளில், 10 தொகுதிகளுக்கு (பிளாக் 1,3,4,5 மற்றும் 7 முதல் 12 முடிய) தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது எனவும், தொகுதி-2ல் 539/1A மற்றும் 89 புல எண்களில் 14.41.00 ஹெக்டேர் புன்செய் நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளது. அதில் கூடல்நகர் என்ற குடியிருப்பு பகுதி உள்ளது. இக்குடியிருப்பு பகுதி அமைந்துள்ள 542/2J மற்றும் 542/2E ஆகியவற்றின் உட்பிரிவுகளில் 34 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். மேலும் தொகுதி-2ல் நில எடுப்பு செய்யும் நிலங்களுக்கு பிரிவு 11(1)ன் கீழான முதல்நிலை அறிவிக்கை மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின் படி, தினத்தந்தி மற்றும் தி இந்து நாளிதழ்களில் 13.05.2022 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, பிரிவு 19(1)ன் கீழான விளம்புகை அறிவிக்கை பிரசுரம் செய்யும் முன் கூடல்நகர் பகுதியில் வசிக்கும் மக்களின், குடியிருப்பு பகுதிக்கு மாற்று இடம் உடனடியாக தேர்வு செய்து, அக்குடும்பங்களை அதில் குடியமர்த்திட வேண்டி உள்ளது. அப்பகுதி மக்கள் ஏற்கனவே தங்களுக்கு உடன்குடி அருகிலுள்ள செட்டியாபத்து கிராமத்தில் சாலை வசதி உள்ள இடத்தில் மாற்று இடம் தரவேண்டி விண்ணப்பம்

செய்துள்ளனர் எனவும், செட்டியாபத்து கிராமத்தில் மாற்று இடமாக தேர்வு செய்யப்பட உள்ள இடம் உடன்குடியில் இருந்து சுமார் 1கிமீ தூரத்தில் உள்ளது எனவும், தங்கள் பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடம், மருத்துவமனை, மற்றும் தொழில் நிமித்தமாக வெளியே சென்று வர பேருந்து வசதி ஆகியவை மிக அருகில் உள்ளதாக மக்கள் தெரிவித்ததன் அடிப்படையில், மேற்படி இடத்தை தேர்வு செய்வது தொடர்பாக கூடல் நகர் பகுதி மக்களிடம் 23.08.2022 அன்று கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு, மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு திருச்செந்தூர் வட்டம், செட்டியாபத்து கிராமத்தில் புல எண்269/3-ல் தாங்கள் அங்கு குடியேறுவதற்கு முழுமனதுடன் சம்மதம் தெரிவித்து சம்மத கடிதம் கொடுத்து உள்ளனர். அதன்படி கூடல்நகர் மக்களை அவர்கள் விருப்பப்படி மறுகுடியமர்த்த திருச்செந்தூர் வட்டம், செட்டியாபத்து கிராமத்தில் புல எண். 269/3ல் மொத்த விஸ்தீர்ணம் 4.02.00 ஹெக்டேரில் 2.42.92 ஹெக்டேர் நிலத்தை தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்த வேண்டி உள்ளது.

iv. நில எடுப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) இஸ்ரோ, திருச்செந்தூர் அவர்களால் 12.09.2022 அன்று புலத்தணிக்கை செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்படி தனிநபர் பேச்சு வார்த்தை மூலம் இந்நிலத்தினை நிலஎடுப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பினை அரசுக்கு பரிந்துரைத்து உரிய நிர்வாக அனுமதி வழங்கும்படி நில நிர்வாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இந்நிலத்தின் மதிப்பினை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளார்.

**தனிநபர் பேச்சுவார்த்தை முறையில் உத்தேச இறுதி இழப்பீட்டுத் தொகை கணக்கீடு:**

| வ. எண் | விவரங்கள் | தொகை (ரூ) |
|---|---|---|
| A | சந்தை மதிப்பின் படி 2.42.92 ஹெக்டேர் புஞ்சை நிலங்களின் மதிப்பு | 13,74,687/- |
| | அதிகபட்ச பேச்சுவார்த்தை மதிப்பு 275% (நகர்ப்புற பகுதியிலிருந்து 8 கி.மீ) | 37,80,839/- |
| B | கட்டிடங்களின் மதிப்பு | 7,41,592/- |
| | மரங்களின் மதிப்பு | 40,78,035/- |
| | மொத்தம் | 48,19,627/- |
| | கட்டிடங்கள் மற்றும் மரங்களுக்கான ஆறுதல் தொகை (100%) | 48,19,627/- |
| | **மொத்தம்** | **96,39,254/-** |
| C | அடிப்படை மதிப்பு ( A + B) | 1,34,19,643/- |
| D | ஊக்கத் தொகை (அடிப்படை மதிப்பில் 25%) | 33,54,911/- |
| E | நிருவாக செலவினம் | 19,43,855/- |
| | **மொத்த தொகை ( C+D+E )** | **1,87,18,409/-** |

3. இந்த நில எடுப்பிற்கான உத்தேச நில மதிப்பு மற்றும் நிர்வாகச் செலவினத்திற்கான மொத்த தொகையையும் கேட்டுபுத்துறையான இந்திய வின்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஏற்றுக்கொள்வதாகவும், ஏற்கனவே இத்திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், இந்நில எடுப்பு புலத்திற்கான இழப்பீட்டுத் தொகையுடன், மறுகுடியமர்வு செய்யப்படவுள்ள குடும்பங்களுக்கு மத்திய நில எடுப்பு சட்டம் 2013-ன் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகையான மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு கூறுகளுக்கானத் தொகை, மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான தொகை ஆகியவற்றையும் சேர்த்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரால் விதிகளின்படி கணக்கீடு செய்யப்பட்டு, கேட்புத்துறையிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ள தனியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்கள் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பினை நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில் கவனமாக ஆய்வு செய்தபின், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்திலுள்ள மாதவன்குறிச்சி கிராமத்தில் அலகு-VIII, தொகுதி-2ல் உள்ள கூடல்நகர் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செய்யவதற்காக திருச்செந்தூர் வட்டம், செட்டியாபத்து கிராம புல எண். 269/3-ல் 2.42.92 ஹெக்டேர் பரப்பினை நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், 2013 அல்லது தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலஎடுப்பு செய்ய உத்தேச மதிப்பீட்டு தொகையான ரூ.1,87,18,409/- (ரூபாய் ஒரு கோடியே என்பத்தி எழு இலட்சத்து பதினெட்டாயிரத்து நானூற்று ஒன்பது மட்டும்) கேட்புத்துறையான இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளதை கருத்தில் கொண்டு, இந்நில எடுப்பிற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேற்படி நில எடுப்பிற்கான உத்தேச நில மதிப்பு மற்றும் நிர்வாகச் செலவினத்திற்கான தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் வைப்பீடு செய்யப்பட வேண்டும் :

"K வைப்பீடுகள் மற்றும் முன் பணங்கள் (B) வட்டி பெறா வைப்பீடுகள் – 8443-00 உரிமையியல் வைப்பீடுகள் – 101 வருவாய் வைப்பீடுகள் – AA வருவாய் வைப்பீடுகள்" - 801 - 02 – வட்டிபெறா வைப்பீடுகள் :

[IFHRMS த.தொ.கு : 8443 – 00 – 101 AA – 80102]

6. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து (ISRO) மீளப்பெறப்படும் (Reimbursement) பணியாளர்களுக்கான நிருவாகச் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும் :

0070 – ஏனைய நிருவாகப் பணிகள் – 60 – ஏனைய பணிகள் – 800 – ஏனைய வரவுகள் – CH – தனியார் பொதுத் துறைகளுக்காக செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப்பணிக்காக செய்த நிருவாகப்பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல் – 227 – வரி அல்லாத கட்டணங்கள் – 99 – ஏனையவைகள்.

[IFHRMS த.தொ.கு : 0070 60 800 CH 22799]

7. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்திலுள்ள மாதவன்குறிச்சி கிராமத்தில் அலகு-VIII, தொகுதி-2ல் உள்ள கூடல்நகர் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செய்வதற்காக கணக்கிடப்பட்டுள்ள நில எடுப்பு பணியாளர்களின் நிர்வாகச் செலவினத்திற்கான தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று (Debit) வைக்கப்பட வேண்டும் :

2053 – 00 – மாவட்ட நிருவாகம் – 094 – ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – FT – தூத்துக்குடி மாவட்டத்தில் இஸ்ரோ/விண்வெளித் துறைக்கு நிலங்களை கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு – 30100 – சம்பளங்கள்.

[IFHRMS த.தொ.கு : 2053 – 00 – 094 FT – 30100]

8. இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணி முடிவடைந்த பின் செலவுகள் அனைத்தும் உரிய கணக்கு தலைப்பிற்கு, உரிய முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். மேலும், இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செலவினை கவனித்து அவற்றினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் வைப்பு செய்வதை கண்காணிக்கும்படியும் நில நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணையானது நிதித்துறை அலுவல்சாரா குறிப்பு எண்.10497/ நிதி (தொழில்)/2023, நாள் 13.4.2023ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்,
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ.) இஸ்ரோ - எஸ்.எஸ்.எல்.வி,
திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்.
நில நிர்வாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005
முதன்மை பொது கணக்காயர் (சி.ஏ), சென்னை- 18.

முதன்மை கணக்காயர் (தணிக்கை), சென்னை - 18.
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி.
துணை கருவூல அலுவலர், தூத்துக்குடி மாவட்டம்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (தொழில்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (நி.நி.2)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
நிதி (வருவாய்/வ.செ.பொ-I/II/தொழில்/ஊதிய பிரிவு/மை.ம.ஆ.பி)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (அ.ந.மு.II)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

19.4.23.
பிரிவு அலுவலர்
19.4.2023